2018 ஜூன் 29] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அப்பகுதிகளில் வெள்ளத் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக நடப்பாண்டில் மாநில நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து, அப்பகுதிகளில் வெள்ள நீர் தங்குதடையின்றி வெளியேற்றப்படும் வகையில், தொடர்புடைய ஏரிகளுக்கு இணைப்புக் கால்வாய்கள் அமைத்தல், மூடிய கால்வாய்களைப் புனரமைத்தல், பாசனமில்லாத ஏரிகளை ஆழப்படுத்தி நீர்த் தேக்கங்களாக மாற்றுதல், வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்பினை ஏற்படுத்துதல், உபரி நீர்க் கால்வாய்கள் மற்றும் சாலையோர கால்வாய்களை அகலப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், திரு. ராமசாமி படையாச்சியார் மற்றும் நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் ஆகியோரின் பிறந்த நாட்களை அரசு விழாக்களாகக் கொண்டாடுதல், பத்திரிகையாளர் ஓய்வூதியத்திற்கான பணிக்கொடையின் வருமான உச்சவரம்பை உயர்த்துதல், பத்திரிகையாளர் நல நிதியம்மூலம் அவர்களின் சிகிச்சைக்கு வழங்கப்படும் தொகையை உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி, மக்கள் தொடர்புத் துறை. உலகத் தமிழர்களின் இதயங்களில் தங்க சிம்மாசனம் இட்டு அமர்ந்திருப்பவரும், திராவிட ஆட்சி தமிழ்நாட்டில் நிலைபெற வித்திட்டவரும், தன்னை ஈன்ற தமிழகத்திற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டி பெருமை சேர்த்தவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தை புதுப்பித்தல், பதிக்கப்பட்டுள்ள கிரானைட் கற்களைப் புதுப்பித்தல், புல்வெளி சீரமைத்தல், மின் பணிகள் மற்றும் இதர புனரமைப்புப் பணிகள் 4 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. சமூக நீதிக்காக பாடுபட்டவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான மறைந்த மரியாதைக்குரிய திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களை பெருமைப்படுத்தும்வகையில், அவரது பிறந்த தினமான செப்டம்பர் 16 ஆம் நாள், ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கலைமாமணி, பத்மஸ்ரீ, பத்மபூஷன், செவாலியே, தாதா சாகேப் பால்கே ஆகிய விருதுகளைப் பெற்று, நடிகர் திலகம் என்று மக்களால் போற்றப்பட்ட மறைந்த திரு. சிவாஜி கணேசன் அவர்கள் கலைத் துறைக்கு ஆற்றிய சேவையைப் போற்றிடும்வகையில், அவரது பிறந்த தினமான அக்டோபர் 1 ஆம் நாள், ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பத்திரிகையாளர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே அவர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

4. பத்திரிகையாளர் பெற்றுவரும் ஓய்வூதியத்தை 8 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியத்தை 4,750 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உயர்த்தி வழங்கியது. மேற்படி, ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கொடையின் உச்சவரம்பு மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

5. பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட நேர்ந்தால், அவர்கள் சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக பத்திரிகையாளர் நல நிதியம்மூலம் தற்போது வழங்கப்பட்டுவரும் 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)